செ.வெ.எண். 24/ஜூன் தேதி : 10.06.2016

# பத்திரிக்கை செய்தி

## தருமபுரி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஏற்கப்பட்டது.



பள்ளிக்கு செல்ல வேண்டிய 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் வேலைக்கு செல்வது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி. குழந்தைகள் குழந்தைகளாக வளர்க்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கு நியமான சூழ்நிலைகளை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சிறப்பு திட்டங்களை அளித்துள்ளார்கள்.

இதன் பயனாக கடந்த 10 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் திட்டமான தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் மூலம் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. இத்திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி, பாடப்புத்தகங்கள், தொழிற்பயிற்சி, மதிய உணவு, சீருடை, பேருந்து பயண சீட்டு, மருத்துவ பரிசோதனை, விடுதி மற்றும் மாத ஊக்கத்தொகை ரூ.150/- ஆகிய அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது. மேலும் பட்டப்படிப்பு படிக்கும் இத்திட்ட சிறார்களுக்கு வருடம் ரூ. 6000/- மாநில அரசு வழங்குகிறது.

இத்திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று வரும் சிறார்களின் குடும்பங்களுக்கு முதியோர் மற்றும் விதவை உதவித்தொகை, குடும்ப அட்டை, இலவச வீட்டு மனை பட்டா, நல வாரிய உறுப்பினர் அட்டை போன்றவை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதுள்ள 22 சிறப்புப் பயிற்சி மையங்களில் 700 சிறார்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதுவரை 15843 சிறார்கள் பல்வேறு தொழில்களில் இருந்து மீட்கப்பட்டு கல்வி அளிக்கப்பட்டு முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து படித்து வருகின்றனர். இவர்களில் இந்த ஆண்டு 32 மாணவர்கள் 10-ம் வகுப்பிலும், 32 மாணவர்கள் 12-ம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். 12-ம் வகுப்பில் P. சிவா 1148 மதிப்பெண்கள் பெற்று இத்திட்ட மாணவர்களின் மாநில அளவில் முதலிடமும், 10-ம் வகுப்பில் M. வருண்குமார் 446 மதிப்பெண்கள் பெற்று இத்திட்ட மாணவர்களில் மாவட்ட அளவில் முதலிடமும் பெற்றுள்ளார்கள். மேலும், இத்திட்ட முன்னாள் மாணவர் எம்.மூர்த்தி மற்றும் வி.கார்த்திக் மருத்துவ பட்டம், சட்டபடிப்பு-1, பொறியியல்-17, இளங்கலை-99, டிப்ளமோ-28, இளங்கலை (வேளாண்மை) -2, இளங்கலை செவிலியர்-1 என 150 மாணவர்கள் உயர்கல்வி பயின்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஜூன் 12 ''சர்வதேச குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக'' உலக அளவில் கடைபிடிக்கப்படுகிறது. ஜூன் 12 விடுமுறையெனில் அதற்கு முந்தைய வேலை நாட்களில் அனைத்து பள்ளிகள், அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்று விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி தருமபுரி மாவட்டத்தில் இன்று (10.06.2016) அனைத்து பள்ளிகளிலும் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டிகளும் காலை 11.00 மணிக்கு அரசு அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு பள்ளிகளில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

முன்னதாக தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் முன்னாள் குழந்தைத் தொழிலாளர் மாணவர்களில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 1148/1200 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்த P.சிவாவிற்கு ரொக்க பரிசுத் தொகை ரூ. 3000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழும், 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 446/500 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் முதலிடம் பிடித்த M.வருண்குமாருக்கு பாராட்டுச் சான்றிதழும் மற்றும் தருமபுரி ஸ்ரீ விஜய் வித்யாலயா (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளியில் 11, 12ம் வகுப்பு விடுதி வசதியுடன் இலவசமாக கல்வி பயில்வதற்கான ஆணையும், 2015-16ம் கல்வி ஆண்டில் உயர்கல்வி படிக்கும் இத்திட்ட முன்னாள் மாணவர்களுக்கு தமிழக அரசு மாதம் ரூ. 500/- வீதம் ஆண்டிற்கு ரூ. 6000/- என மொத்தம்150 மாணவர்களுக்கு ரூ. 9.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வங்கி வரைவோலையினையும், 2016-17-ம் கல்வியாண்டில் பல்வேறு தொழில்களிலிருந்து மீட்கப்பட்டு ஐருகு சிறப்புப் பயிற்சி மையத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறார்களுக்கு தமிழக அரசின் விலையில்லா கல்வி பொருட்களை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. ரேவதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு. சுப்ரமணி, மாவட்ட திட்ட மேலாளர் (புதுவாழ்வு திட்டம்) திரு. நாராயணன் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் கலந்துக் கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.